**05.08.2026**

**அசல் வழக்கு எண். 128/2023**

**பி.வா.சா.1 –** திரு. ஆறுமுகம்

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

1. வாதியின் அப்பாவை உங்களுக்கு தெரியும் என்றால் பிரச்சனைக்கு பிறகுதான் தெரியும். அதற்கு முன்பாக வாதியின் அப்பாவை பார்த்து பேசி பழகி உள்ளீர்களா என்றால் இல்லை. பிரச்சனை எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான். உங்கள் பூர்வீகமும் வாதியின் அப்பா பூர்வீகமும் பக்கத்து பக்கத்து ஊர் என்றால் சரியல்ல. 10 கிலோ மீட்டர் இருக்கும். புதுமனை செட்டிக்குளமும் உங்கள் ஊரும் பக்கத்து பக்கத்து ஊர் என்றால் சரிதான். வாதி இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு வாதி மீது போலீஸ்சில் எதுவும் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதி மீது அது சம்பந்தமாக நீங்கள் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. உங்களுக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். வாதி நாகர்கோவிலில் குடியிருந்து வருவது உங்களுக்கு வழக்கிற்கு முன்பு தெரியுமா அல்லது பின்பு தெரியுமா என்றால் பின்பு தான் தெரியும். வாதி என்ன வேலை பார்க்கிறார் வருமானம் என்ன என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல அரசு வேலை பார்க்கிறார் என்று தெரியும் வருமானம் தெரியாது. நீங்கள் வாதிக்கு பணம் கொடுப்பதற்கு வசதியில்லை என்பதை யூகத்தின் அடிப்படையில் தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

3. உங்களிடம் காட்டப்படும் வாசாஆ 1 ல் உள்ள கையெழுத்து உங்களுடையதா என்றால் இல்லை. வாசாஆ 2 சான்றிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து உங்களுடைய என்றால் (சாட்சியிடம் ஆவணம் கையில் கொடுக்கப்பட்டு ஆவணத்தை சாட்சி பார்த்துவிட்டு ) எனது கையெழுத்து இல்லை.

4. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து, எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து உங்களுடையது தானா என்றால் ஆமாம். வாசாஆ 1 ல் உள்ள கையெழுத்து உங்களுடையது தான் என்றும் வழக்கிற்காக பொய்யாக

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.08.05 18:28:31 +0530

சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கிற்கு முன்பாக வாதியின் தந்தை குமாரசாமி நாடார் உங்களிடம் இருந்து சொத்துக்களை விலைக்கு வாங்க முன்வந்ததாக கூறும் விபரத்தை எதிர்வழக்குரையில் கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். எந்தசொத்தை விலைக்கு வாங்க வந்தார் என்ற விபரத்தை நீங்கள் கூறியுள்ளீர்களா என்றால் கூறவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உங்கள் சொத்துக்கான ஆவண நகலை வாதியின் தகப்பனார் குருசாமி நாடாரிடம் கொடுத்துள்ளீர்களா என்றால் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை.

6. நீங்கள் நிருபண வாக்குமூலத்தில் இந்த ஆவணத்தை நகலை பார்த்து உங்கள் கையெழுத்தை மோசடியாக எடுத்து கடன் உறுதி சீட்டு செய்து உருவாக்கப்பட்டதாக நீங்கள் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. அசல் கையெழுத்து உள்ள ஆவணங்களை வாசாஆ1வுடன் உள்ள கையெழுத்தை ஒப்பீடு செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் நீங்கள் நிபுணரிடம் அனுப்புவதற்கும் கையெழுத்து உள்ள அசல் ஆவணங்களுடன் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. நீங்கள் வாதியிடம் வாங்கிய கடனுக்காக தான் பிரோ நோட்டை எழுதிக் கொடுத்தீர்கள் என்றும் அதில் கண்ட தொகையை அசல் மற்றும் வட்டியுடன் கொடுக்கக்கடமைப்பட்டவர் என்றும் அதில் கண்ட தொகையை திரும்ப செலுத்தாமல் இருப்பதற்காக பொய்யாக கட்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.08.05 18:28:36 +0530